**திண்டுக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**பி.சி.எண். 10/2020, நாள். 16.05.2020**

**பொருள்:** பள்ளிக் கல்வி - தேர்வு - 2019-20ம் கல்வியாண்டிற்குரிய 10ம் வகுப்பு பொதுத் தேர்வு மற்றும் விடுபட்ட 11ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகள் நடத்துவதற்குரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகள் - சார்பு.

**பார்வை:** கல்வித் துறைச் செயலர், ஆணையர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர், தேர்வுத் துறை இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல், அறிவுறுத்தல்கள் - காணொளிக் காட்சி, நாள். 15.05.2020

...........

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள் அனைத்துவகை தலைமையாசிரியர்கள் கீழ்க்கண்ட செயல்முறைகளை உடன் நடைமுறைப்படுத்தவும், போர்க்கால நடவடிக்கையாக செயல்படுத்தி உரிய விபரங்களை உடனுக்குடன் உயர் அலுவலர்களுக்கு அறிக்கையாக அளித்திட வலியுறுத்தப்படுகிறது.

1. 2019-2020ஆம் கல்வியாண்டிற்குரிய பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கால அட்டவணைப்படி நடத்தப்படுகிறது.
2. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பதினொன்றாம் வகுப்பு பொதுத் தேர்வினை 02.06.2020ம் தேதி நடத்தப்படும்.
3. பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் இறுதி நாளில் தேர்வு எழுதாத மாணவர்களுக்கு 04.06.2020 அன்று நடத்தப்படும்.
4. அனைத்து வகை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளும் தேர்வு மையமாக செயல்படும்.
5. அந்தந்த பள்ளி மாணவர்கள் அவர்கள் பயின்ற பள்ளியிலேயே தேர்வு எழுத வேண்டும்.
6. தேர்வு எழுதும் மாணவர்களுக்குரிய வினாத்தாட்களை தேர்வு நாளன்று உரிய தேர்வு மையப் பள்ளியிலிருந்து துறை அலுவலர் பெற்றுச் செல்ல வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. தேர்வு எழுதும் மாணவர்களுக்குரிய விடை எழுதும் தாட்களை முதல் தேர்வன்று மொத்தமாகப் பெற்று சரிபார்த்து அவரவர் பள்ளியில் தேர்வு நடைமுறைகளின்படி பாதுகாக்கப்பட வேண்டும்.
8. தேர்வு முடிந்ததும் வழக்கமான நடைமுறைகளின்படி விடைத்தாள் உட்பட அனைத்து ஆவணங்களையும் முதன்மைத் தேர்வு கண்காணிப்பாளரும் துறை அலுவலரும் பாதுகாப்புடன் முதன்மைத் தேர்வு மையத்திற்குச் சென்று அனைத்து ஆவணங்களையும் ஒப்படைத்துவீட்டு செல்ல வேண்டும்.
9. ஏற்கனவே தேர்வு மையமாக இருந்த தேர்வு மையத்தின் முதன்மைத் தேர்வு கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர்கள் இம்மையத்திற்குரிய CSD படிவங்கள், தேர்வுக்கு வருகை தராதவர்கள் விபரங்கள் போன்ற அனைத்து ஆவணங்களையும் தொகுத்து மொத்தமாக வழித்தட அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். இம்மையத்திற்குட்பட்ட தேர்வுக்கு வருகை தராதவர்கள் விபரத்தை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
10. விடைத்தாட்கள் அடங்கிய துணி உறையில் கட்டப்பட்ட உறைகளை அப்படியே ஒன்று சேர்த்து கட்டி ஒப்படைக்கப்பட வேண்டும்.
11. முதன்மைக் கல்வி அலுவலகத்தின் சார்பில் தேர்வுகள் சார்பான ஐயங்களை கேட்டறிந்து கொள்ள ஐந்து நபர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு அக்குழுவில் அடங்கியவர்கள் பெயர் மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றுடன் மின்னஞ்சல் மூலம் தங்கள் பள்ளிகளுக்கு அனுப்பப்படும். மாணவர்கள் / பொதுமக்கள் இக்குழுவில் உள்ளவர்களை தொடர்பு கொண்டு தேர்வு சார்பான ஐயங்களை கேட்டறியலாம் என்ற விவரத்தினை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்திட வேண்டும்.
12. அனைத்துவகைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் 21.05.2020 வியாழக் கிழமைக்குள் அனைத்து ஆசிரியர்களையும் அலைபேசியில் தொடர்பு கொண்டு பள்ளிக்கு வருகை தரத்தக்க வகையில் தயாராக இருக்க அறிவுறுத்த வேண்டும்.
13. அனைத்துவகைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மூலம், பத்தாம் வகுப்பு மாணவர்கள், தேர்வு எழுதாத பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவிகளை நேரிடையாகவும்,

பெற்றோர்களுக்கும் தேர்வு எழுத தயாராக இருக்கமாறும் ஆயத்தப்படுத்த வேண்டும்.

14. தேர்வு எழுதக் கூடிய மாணவர்கள் வெளியூர்களிலோ, பிற மாவட்டங்களிலோ அல்லது வேறு மாநிலங்களிலோ இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு தேர்வுக்கு வருகை தருவதற்கு E-PASS பெறுவது சார்பான முழு வழிகாட்டுதலை தலைமையாசிரியர்கள் ஏற்பாடு செய்துவிட்டு E-PASS பெற வேண்டிய முழு விபரத்தினையும் மாவட்டக் கல்வி அலுவலர்களிடம் நேரிடையாக எழுத்து மூலம் 21.05.2020க்குள் அளித்திட வேண்டும்.
15. 100 சதவிகிதம் மாணவர்கள் தேர்வு எழுதுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
16. Containment Zone Area-வில் தேர்வு எழுத வேண்டிய மாணவர்கள் இருப்பின் அவர்கள் விபரத்தினை உடன் எழுத்து மூலம் மாவட்டக் கல்வி அலுவலர்களிடம் 19.05.2020க்குள் அளித்திட வேண்டும்.
17. Containment Zone Area-வில் இருந்து வரும் மாணவர்களுக்கு தனி சிறப்புத் தேர்வு மையம் அமைக்கப்படும்.
18. Containment Zone Area-வில் இருந்து வரும் மாணவர்களை பொதுத் தேர்வு மையத்தில் அனுமதிக்கக் கூடாது.
19. தேர்வு மையமாகவும், துணைத் தேர்வு மையமாகவும் செயல்பட உள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் 22.05.2020 வெள்ளிக் கிழமைக்குள் பள்ளி வளாகம், வகுப்பறைகள், கழிப்பறைகள், மேசை, நாற்காலிகள், மாணவர்கள் இருக்கைகள் குடிநீர் தொட்டிகள், அனைத்தும் தண்ணீர் ஊற்றி தூய்மை செய்துவிட்டு சார்ந்த ஊராட்சி/பேரூராட்சி, நகராட்சி/மாநகராட்சி, அலுவலகத்தை தொடர்புகொண்டு அவர்களின் ஒத்துழைப்புடன் கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.
20. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள் பள்ளித் தூய்மைப் பணிகளை உறுதி செய்திட வேண்டும்.
21. தேர்வு எழுதும் அறைகள் 10 மாணவர்களுக்கு 1 வகுப்பறை வீதம் தயார் செய்து 10 மேசை, பெஞ்ச்கள் ஏற்படுத்திட வேண்டும்.

www.Padasalai.Net

தேர்வின்போது 1 பெஞ்ச்க்கு 1 மாணவர் வீதம் Zig Zag ஆக அமர வைக்கப்பட வேண்டும்.

22. மாணவர்கள் தேர்வு எழுத வருகைதரும் போதும் வெளியே செல்லும்போது ஒன்று கூடி நிற்கவோ, அமரவோ செல்லவோ அனுமதிக்கக் கூடாது. ஒவ்வொரு அறையில் உள்ளவர்களை தனித்தனியாக உள்ளே அனுமதிக்க வேண்டும், தேர்வு முடிந்ததும் தனித்தனியாக வெளியே அனுப்பிட வேண்டும்.
23. அனைத்து ஆசிரியர்கள்/பணியாளர்கள்/மாணவர்கள் அனைவரும் மூன்றடுக்கு அல்லது இரண்டடுக்கு MASK கட்டாயம் அணிந்திருக்க வேண்டும்.
24. பள்ளிக்குள் வருகைதரும்போதும, வெளியே திரும்ப செல்லும்போது கிருமி நாசினி அல்லது சோப்பு கொண்டு இரு கைகளையும் நன்றாக தூய்மை செய்திட வேண்டும்.
25. தேர்வுக்கு அனைத்து நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆசிரியர்களையும் பயன்படுத்த உள்ளதால் உதவி பெறும்/உதவி பெறாத பள்ளிகள், துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றக்கூடிய பட்டதாரி ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் தேர்வுப் பணிக்கு ஆயத்தமாக இருக்க உரிய நடவடிக்கைகளை மாவட்டக் கல்வி அலுவலர்கள்/வட்டாரக் கல்வி அலுவலர்கள் பள்ளித் துணை ஆய்வாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.
26. தேர்வு எழுத உள்ள மாணவர்கள் தேர்வு மையத்திற்கு வருகைதர வாகன வசதி, பேருந்து வசதி இல்லாத நிலை இருப்பின் உரிய விபரங்களை தொகுத்து ஒரு பொறுப்பாசிரியரை நியமித்து அதற்கான ஏற்பாட்டினை செய்திட வேண்டும்.
27. மாணவர்கள் தேர்வு எழுதும் விடைத்தாட்களில் உள்ள பழைய தேதியினை வட்டமிட்டு அருகில் தேர்வு எழுதும் தேதியை பதிவு செய்திட அறிவுத்தப்பட வேண்டும்.
28. மாணவர்கள் நன்கு படித்து தேர்வு எழுதவும், கொரோனா தொற்று ஏற்படாதவாறு நாம் எப்படி இருந்திட வேண்டும் என்ற வழிகாட்டுதலை மாணவர்களுக்கு அளித்திட வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

29. 2019-2020 பத்தாம் வகுப்பு கால அட்டவணை

நேரம் - 3 மணி நேரம் ஜுன் 2020

| | | | |
|---|---|---|---|
| 01.06.2020 | திங்கள் | முற்பகல் | மொழிப்பாடம் |
| 03.06.2020 | புதன் | முற்பகல் | ஆங்கிலம் |
| 05.06.2020 | வெள்ளி | முற்பகல் | கணிதம் |
| 06.06.2020 | சனி | முற்பகல் | விருப்பப்பாடம் |
| 08.06.2020 | திங்கள் | முற்பகல் | அறிவியல் |
| 10.06.2020 | புதன் | முற்பகல் | சமூக அறிவியல் |
| 12.06.2020 | வெள்ளி | முற்பகல் | தொழில் பாடம் |

( புதிய / பழைய பாடத் திட்டம் )

இணைப்பு - தேர்வு சார்பான ஐயங்களை
தெளிவுபடுத்தும் ஆசிரியர்கள் குழு பட்டியல்

ஒம்/-
முதன்மைக் கல்வி அலுவலர்,
திண்டுக்கல்.

பெறுநர்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,

அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்,

அனைத்துவகைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,

அனைத்து பள்ளித் துணை ஆய்வாளர்கள்,

www.Padasalai.Net